செ.வெ.எண்.601 நாள்.23.11.2017

## காஞ்சிபுரம் மாவட்டம்

## சுனாமி ஒத்திகை பயிற்சி இன்று (24.11.2017) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் செய்யூர் மற்றும் கோவளம் பகுதிகளில் நடைபெற்றது.

தமிழ்நாடு மற்றும் பிற கடலோர மாநிலங்களில் சுனாமி முன்னெச்சரிக்கை பற்றிய விவரங்கள் குறித்து, ஹைதராபாத்தில் உள்ள இந்திய பெருங்கடல் முன்னறிவிப்பு அமைப்பு (INCOIS) தெரிவிக்கின்றது. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையமானது, இந்திய பெருங்கடல் முன்னறிவிப்பு அமைப்புடன் (INCOIS) இணைந்து, ஆந்திரா பிரதேசம், மேற்கு வங்கம், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஒடிசா ஆகிய மாநிலங்களிலுள்ள கடலோர மாவட்டங்களில், சில கிராமங்களை தேர்ந்தெடுத்து, சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கொண்ட மாதிரி பயிற்சியானது தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையக்குழு வழிகாட்டுதலின்படி நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் சுனாமி ஏற்படும் பட்சத்தில் மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ள வேண்டிய அவரச கால நடவடிக்கை குறித்த ஒத்திகை பயிற்சி கடலோர பகுதிகளில் இரண்டு இடங்களில் 1. திருப்போரூர் வட்டம் – கோவளம், கேளம்பாக்கம் 2. செய்யூர் வட்டம் – பரமன்கேணி குப்பம் ஆகிய இடங்களில் இன்று (24.11.2017) நடைபெற்றது.

மாவட்டத்திலுள்ள மாவட்ட பேரிடர் மேலாண்மை மையத்திலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் சுனாமி குறித்து எச்சரிக்கை அறிவிப்பினை அறிவித்த உடன் சார் ஆட்சியர்கள் தலைமையில் கோவளம், பரமன்கேணி குப்பம் ஆகிய கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள மீட்புப்பணி அலுவலர்கள் கடற்கரை அருகில் குடியிருக்கும் பொதுமக்களை வாகனங்கள் மூலம் எச்சரித்து போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு பாதுகாப்பாக மீட்டு கோவளம் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் பரமன்கேணிகுப்பம் புயல் பாதுகாப்பு மையம் ஆகிய பாதுகாப்பு மையங்களில் தங்க வைத்து அவர்களுக்கு சுகாதாரத்துறையின் மூலம் உடனடியாக முதலுதவிகள், மருத்துவ உதவிகள் வழங்கப்படுவது, மேலும் சுனாமியினால் கை கால் அடிப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து பாதுகாப்பாக மீட்டு பாதுகாப்பு மையங்களில் தங்க

வைப்பது மேல் சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பது உள்ளிட்ட ஒத்திகை மற்றும் பயிற்சி நடைபெற்றது.

இப்பணிகளில் தேசிய பேரிடர் மீட்பு படை, வருவாய்த்துறை, காவல்துறை, ஊரக வளர்ச்சித்துறை, போக்குவரத்து துறை, பொதுப்பணித்துறை, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சுகாதாரத் துறை, தீயணைப்புத் துறை, கடற்படை, கடலோரப் பாதுகாப்புப்படை, உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் இப்பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு சார் ஆட்சியர் திரு.வி.பி.ஜெயசீலன் இ.ஆ.ப., மதுராந்தகம் சார் ஆட்சியர் திரு.கில்லி சந்திரசேகரன் இ.ஆ.ப., தேசிய பேரிடர் மீட்பு படை அணி தளபதி விஜோஜ் ஜோசப், துணை தளபதி பி.எம்.மீனா, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.சுப்பராஜ், மற்றும் வட்டாட்சியர்கள் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், செஞ்சிலுவை சங்கம் திரு.மாணிக்கம் ஆகியோர் உள்ளனர்.

செய்தி வெளியீடு –செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,காஞ்சிபுரம்.